சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 23.07.2025
வா.சா.1 - பாலு S/o அரசப்பன்
O.S No.241/2023 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
குறுக்கு விசாரணை :

நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் படிக்கவில்லை. பிரதிவாதி அழகு தேவி வேறு சமூகத்தை சார்ந்தவர் நான் வேறு சமூகத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். பிரதிவாதி அழகுதேவி விஷேச காலங்களில் முக்கியமான நேரங்களில் அவ்வப்போது வந்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். அழகுதேவி ஆரம்ப சுகாதரா நிலையத்தில் சூரக்குண்டில் உதவியாளராக பணியாற்றினார் என்றால் சரிதான். அழகுதேவிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. அழகுதேவியின் தம்பி மூக்கன் என்ற பொன்னடியானை எனக்கு தெரியும். பணம் வாதியிடம் கொடுக்கல் வாங்கல் செய்தது என் மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு பிரதிவாதி கடன் வாங்கிய விபரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அழகுதேவியின் தம்பி மகன் திருமணத்திற்காக பணம் தேவைப்படுவதாக என் மனைவி என்னிடம் தெரிவித்தார். அசல் வழக்கில் என் மனைவி சாந்தி அந்த விபரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறார். வழககுரையில் ஒரு செண்டு எவ்வளவு ரூபாய் விலை பேசியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை எந்றால் சரிதான். ஆனால் 3000 ரூபாய் என்று விலை பேசப்பட்டது. வழக்கு சொத்தின் தென்வடல் மற்றும் கிழமேல் விஸ்தீரணம்தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண்.159/5 ஆகும். சூரக்குண்டில் உள்ளது. பட்டா எண் தெரியாது. 1லட்சம் ரூபாய் ஒரே நாளில் வழங்கினோம். பணம் கொடுத்த அன்றே பத்திர பதிவு நடைபெற்றது. என்னுடைய வீட்டில் வைத்து சூரக்குண்டில் பிரதிவாதியிடம் என் மனைவி சாந்தி பணம் கொடுத்தார். பத்திர பதிவு நடைபெற்ற போது சார்பதிவாளர் அலுவலகத்தில் பணம் வாங்கிவிட்டதாக கூறி தான்

கையெழுத்து செய்தார். மேற்படி விபரம் பிராதில் கூறப்படவில்லை என்றால்ச ரிதான். 1 லட்சத்திற்கு மேல் பணபரிமற்றம் செய்யப்படும் போது வங்கிமூலமாக தான் செய்ய வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு மேலூர் கனராவங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. தமிழரசன் என்னுடைய மூத்த மகன் ஆவார். அவருக்கு அழகர்கோவில் SBIயில் கணக்கு உள்ளது. பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் 25000 ரூபாய் என் மகன் வங்கிகணக்கில் பணம் செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்தானது மதுரை - திருச்சி தேசிய நெடுஞ்சாலைக்கு அருகில் உள்ளது என்றால் சரிதான் வழக்கு சொத்து சூரக்குண்டில் உள்ளது அது தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 1 கி.மீ தொலைவில் உள்ளது. எங்கு வைத்து பிரதிவாதியிடம் பத்திரம் பதிந்து கொடுக்கும் படி வாதியோ, நானோ கேட்டேன் என்ற விபரத்தை குறிப்பிடடு சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி அழகுதேவி தன்னுடைய மகள் திருமணத்திற்காக ரூ.1,11,000 கடனாக பெற்றிருந்தார் என்றும் ஆனா் சொத்தை கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுக்க கேட்கவே அவர் நம்பிக்கையின் அடிப்படையில் கையெழுத்து செய்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதி மாதமாதம் சரிவர வட்டி செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து அதிகமதிப்புடைய சொத்து என்பதால் கிரைய சொத்து அபகரிக்க இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கடன் பெற்ற ரூபாய்.1,11,000 ரூபாயை பிரதிவாதி நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யதயராக இருக்கிறார் என்றும் வாதி தாக்கல் செய்த ஏற்றதை ஆற்றுகை பரிகாரத்திற்கான இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.23 07:31:04 +0530

Sub Judge

Melur